# இடைநிலைக் கல்வித் தேர்வு வினாத்தாள்
# தமிழ் (237)

காலம் : 3 மணி | மொத்த மதிப்பெண்: 100

பகுதி அ

பிரிவு அ: தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதி

(5 செய்யுள் + 9 உரைநடை = 14 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:

1. உரிமைச் செம்பயிரில் தமிழ் என்னவாக இருக்கின்றது? (1 மதிப்பெண்)
2. ஓசோன் ஓட்டை எதைத் திறப்பது போல இருக்கிறது? (1 மதிப்பெண்)
3. (1 மதிப்பெண்)
   (அ) பெண் வன்முறையை எதைப்போல சகஜமாக்கிக் கொள்கிறாள்?
   (அல்லது)
   (ஆ) கட்சிகளின் கலப்பு மணத்தை எவ்வாறு அழைக்கிறோம்?
4. (1 மதிப்பெண்)
   (அ) எவ்வாறு கற்க வேண்டும்?
   (அல்லது)
   (ஆ) எது உண்மையான செல்வம்?
5. (1 மதிப்பெண்)
   (அ) சுவைகள் எத்தனை வகைப்படும்?
   (அல்லது)
   (ஆ) நிலைத்து நில்லாதவை யாவை?

பின்வரும் பத்தியை கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்: ( வினா எண் 6 - 7)

முறுக்குப் பாட்டி முத்தாச்சி என்றால் சிறு குழந்தைகளுக்குத்தான் தெரியும். அவள் நாவல் உலகில் காணப்படும் மனித உருவங்கள் போல் முறுக்கு விற்ற பணத்தினாலோ ரங்கூனிலிருந்து திடீரெனத் தோன்றும் தமயனின் ஐசுவரியத்தினாலோ கோடீசுரியாகிவிட வில்லை. வறுமையில் குசேலரின் தமக்கை. சமயக் குரவர்கள் இயற்றும் அற்புதங்கள் என்று செப்பிடு வித்தைகள் நடவாத இந்தக் காலத்தில் அவள் தினந்தினம் காலந்தள்ளுவதுமல்லாமல், தனது ஒரே குமாரத்திக்கு விவாகம் செய்யவும் ஆரம்பித்ததுதான் அற்புதத்திலும் அற்புதம்.

வின்டில் துரை பங்களாவில் பங்கா இழுக்கும் மாடசாமி பிள்ளைக்குத் தன் மகளைக் கொடுக்க நிச்சயித்துவிட்டாள். நாளை காலையில் கலியாணம். சாயங்காலம் ஐந்தரை மணியிருக்கும். முறுக்குப் பாட்டி தங்கவேலு ஆசாரியின் வீட்டுத் திண்ணையில், சுவரருகில் சாய்ந்து காலை நீட்டி உட்கார்ந்திருக்கிறாள்.

செம்பாதி நரைத்த தலை ஜீவியத்தில் தான் பட்ட கஷ்டங்களைப் படம் போட்டுக் காட்டுவதுபோல் கோடுகள் நிறைந்த முகம். பாம்படமில்லாது புடலங்காய்த் தண்டுகள் மாதிரித் தொங்கும் காதுகள். இந்திரன் கலையாய் என் மருங்கிருந்தான் எனக் காணப்படும் சம்பிரதாயமாகப் புடவை என்ற இரண்டு வெள்ளைத் துண்டுகள். இவள் பணக்காரியல்லவள் என்பதை இடித்துக் கூறியன. கையிலிருந்த உலர்ந்த வெற்றிலையை வாயில் போட்டுக் கொண்டு, அதற்குத் துணையாக ஒரு நீளத்துண்டுக் கருப்பட்டிப் புகையிலையையும் உள்ளே செலுத்தி கைகளைத் திண்ணையில் துடைத்துவிட்டு, ஆசாரியாரே! என்ன வேலையெ சுருக்கா முடியுமட மோசம் பண்ணிப்பிடாதீரும்!. என்றாள்.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு சரியா தவறா என கண்டறிக. (1x2 = 2 மதிப்பெண்கள்)
   - (i) முறுக்குப் பாட்டியின் பெயர் முத்தாச்சி.
   - (ii) முறுக்குப் பாட்டி வறுமையில் குசேலரின் தமக்கை.
   - (iii) தன் மகளை கந்தசாமிப் பிள்ளைக்கு திருமணம் செய்ய பேசினாள்.

7. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1x1= 1 மதிப்பெண்)

   முறுக்குப் பாட்டி யார் வீட்டு திண்ணையில் அமர்ந்திருந்தாள்?
   (அ) விண்டில் துறை (ஆ) குசேலர் (இ) மாடசாமி பிள்ளை (ஈ) தங்கவேலு ஆசாரி.

8. பொருத்துக (1x4= 4 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| (அ) திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் | - | கடமை ஒழுங்கு |
| (ஆ) மகாத்மாவின் மரணத்திற்கு காரணம் | - | மதபோதகர்கள் |
| (இ) நாடு முன்னேற எது வேண்டும் | - | மதவெறி |
| (ஈ) தரும மகாமித்திரர்கள் | - | காந்தியடிகள் |

9. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1x2=2 மதிப்பெண்கள்)

   (i) பள்ளியின் முதல்வர் எவ்வாறு உருவகப்படுத்தப்படுகிறார்?

   (அ) பெருந்தலைவராக (ஆ) காவலராக (இ) ஆசிரியராக (ஈ) சிறை அதிகாரியாக.

   (ii) முதல்வரின் ஆறாம் விறல் போன்றது எது?

   (அ) பிரம்பு (ஆ) கட்டைவிரல் (இ) கைத்தடி (ஈ) லத்தி.

பிரிவு ஆ:

**பின்வரும் பத்தியை கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். ( வினா எண் 10 - 11 )**

கணினியின் பின்னணி மிகவும் சுவையானது. எங்கு, எப்படித் துவங்கி நாம் இன்றைய மின் கணினி எனும் கணினியில் வந்து நிற்கிறோம்? பல ஆண்டுகளுக்கு முன்னால் நாம் ஆரம்பப் பள்ளியிலே கணக்கிடக் கற்றுக் கொள்ளும்போது ஒரு பாசிச் சட்டத்தைப் பயன்படுத்தி வந்தது சிலருக்கு நினைவிருக்கக் கூடும். அதுதான் அபாகஸ் எனப்படும் கருவியாகும். ஒரு மரச்சட்டத்தில், இணை கோடுகளாக இருக்கும் கம்பிகளில் பாசிமணிகள் கொண்ட அமைப்பாகும். ஆந்தச் சாதனம் இன்றுங்கூடச் சீனா மற்றும் சப்பான் நாடுகளில் பயன்படுத்தப்பட்டுவரும் கருவி. அது 5000 ஆண்டுகளுக்கு முன்னரே புழக்கத்தில் இருந்த கருவியாகும்.

பின்னர் ஸ்காட்லாந்து கணக்கியலாளரான ஜான் நேபியர் என்பார் எண்கள் பொறிக்கப்பட்ட குச்சிகளைக் கொண்டு கணக்கிடும் சாதனத்தை உருவாக்கினார். ஆவை நேபியர் ராடுகள் என்று அழைக்கப்பட்டன.

பின்னர் பிரான்சு நாட்டு கணக்கீட்டாளரான பிளேஸ் பாஸ்கல் என்பார் 1642 ஆம் ஆண்டு அரித்மடிக் எஞ்சின் (கணக்கு எந்திரம்) அல்லது பாஸ்கலைன் எனும் எந்திரவியல் கணக்கீட்டுக் கருவி ஒன்றை உருவாக்கினார். அதில் உள்ள பல்வேறு அம்சங்கள் இன்றைய எந்திரவியல் கணக்கீட்டுச் சாதனங்களிலும் உள்ளன.

1694 ஆம் ஆண்டு லிப்னிஸ் எனும் ஜெர்மன் நாட்டு கணக்கியலார் ஸ்டெப்புரெக்னர் எனும் கருவியை உருவாக்கினார். அதனால் கூட்டவும் கழிக்கவும், பெருக்கவும், வகுக்கவும் இயன்றதோடு வர்க்கமூலங்களைக் காணவும் முடிந்தது.

**10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. (3x1=3 மதிப்பெண்கள்)**

i) மரச்சட்டத்தில் பாசிமணிகள் கொண்ட கருவி ------------ ஆண்டுகள் பழமையானது.

ii) ஜான் நேபியர் உருவாக்கிய சாதனம் -------------- .

iii) பாஸ்கலைன் கருவியை உருவாக்கியவர் --------------------- .

iv) லிப்னிஸ் -------------- நாட்டைச் சேர்ந்தவர்.

11. எவையேனும் மூன்றனுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக. (3x1=3 மதிப்பெண்கள்)

i) ஜான் நேபியர் எந்நாட்டைச் சார்ந்தவர்?

(அ) பிரான்சு (ஆ) இந்தியா (இ) ஸ்காட்லாந்து (ஈ) ஜெர்மன்

ii) ஸ்டெப்புரெக்னர் கருவியை உருவாக்கியவர்

(அ) ஜான் நேபியர் (ஆ) லீப்னிஸ் (இ) ஜோசப்

(ஈ) அபாகஸ்

iii) கணக்கிடுவதற்காக முதன்முதலில் உருவாக்கப்பட்ட கருவி

(அ) பாஸ்கலைன் (ஆ) அபாகஸ் (இ) ஸ்டெப்புரெக்னர்

(ஈ) நேபியர் ராடு

iv) ஸ்டெப்புரெக்னர் கருவி உருவாக்கப்பட்ட ஆண்டு

(அ) 1694 (ஆ) 1698 (இ) 1695 (ஈ) 1684

பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 12)

நமது நாடு இந்தியத் திருநாடு. இந்தியத் திருநாட்டின் ஒரு மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாட்டைப் பாரதி செந்தமிழ்நாடு என்று அழைக்கிறார். செம்மையான தமிழ்மொழி பேசும் நாடு செந்தமிழ் நாடு. செம்மை + தமிழ் = செந்தமிழ்நாடு. செந்தமிழ் நாடு என்ற கூற்றைக் கேட்கும் பொழுது உள்ளம் மகிழ்கிறது. செந்தமிழ் நாடு என்ற தொடரைக் கேட்கும் பொழுது காதுகளில் இன்பமாகிய தேன் வந்த பாய்வது போல் இனிக்கிறது. எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழி பேசும் நாட்டைப் பற்றிக் கேட்கும்பொழுது காதுகளில் இனிக்கின்றன. மனம் மகிழ்ச்சி அடைகிறது. நாங்கள் பெருமிதம் அடைகின்றோம். இந்த, செந்தமிழ்நாடு எங்கள் தந்தையர் நாடாகும். எங்கள் தந்தையர் வீரம் மிக்கவர்கள். ஆறநெறியில் வாழ்ந்தவர்கள். பண்புடையவர்கள். எனவே எங்கள் தந்தையர் நாடு எங்கள் செந்தமிழ் நாடு. எங்கள் தந்தையர் நாடு என்ற நிலையைக் கேட்கும் பொழுது எங்களுக்கு ஒரு சக்தி தோன்றுகிறது. அவர்தம் வீரவாழ்வும், அறவாழ்வும், ஒழுக்கமான வாழ்வும் எங்களுக்கு ஒரு புது சக்தியை அளிக்கின்றன.

செந்தமிழ் நாடு இயற்கை வளமிக்க நாடாகும். நன்செயும் புன்செயும் கொஞ்சி விளையாடும் நாடு. பல்வேறு ஆறுகள் ஓடி எங்கள் செந்தமிழ் நாட்டைச் செழிக்க வைக்கின்றன. காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருனை என்னும் ஆறுகள் ஓடுவதால் நீாவளம் பெற்ற நாடாகத் திகழ்கிறது. நீர்வளம் பெருகுவதால் இயற்கை வளம் மேம்படுகிறது. இயற்கை வளம் ஓங்குவதால் மக்கள் நலம் செழிக்கிறது. மக்கள் நலம் செழிப்பதால் சமுதாயம்

வளம் பெறுகிறது. சமுதாயம் வளம் பெறுவதால் நாடு செழிக்கிறது. எனவே, எங்கள் செந்தமிழ் நாடு செழிப்பான நாடாக விளங்குகிறது.

12. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு சரியா தவறா என கண்டறிக. (1x5 = 5 மதிப்பெண்கள்)

(i) இந்தியத் திருநாட்டின் ஒரு மாநிலம் தமிழ்நாடு.
(ii) செந்தமிழ்நாடு என கேட்கும்போது காதுகளில் பால் பாய்வதுபோல் இனிக்கிறது.
(iii) தமிழ்நாட்டைப் பாரதி செந்தமிழ்நாடு என்று அழைக்கிறார்.
(iv) செந்தமிழ்நாடு எங்கள் தாய்நாடாகும்.
(v) சமுதாய வளம் பெறுவதால் நீர்வளம் பெருகுகிறது.
(vi) இயற்கை வளம் ஓங்குவதால் மக்கள் நலம் செழிக்கிறது.
(vii) காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருனை என்னும் ஆறுகள் ஓடுவதால் நீர்வளம் பெற்ற நாடாகத் திகழ்கிறது.

13. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து பொருத்துக. (1x1= 1 மதிப்பெண்)

(i) ஓசோன் ஓட்டை எதைத் திறப்பது போல இருக்கிறது?
(அ) நெற்றிக்கண் (ஆ) குளம் (இ) பள்ளம் (ஈ) முட்டை
(ii) உறுதியான அணைகளையும் உருக்குலைப்பது.
(அ) கற்கள் (ஆ) காட்டு வேர்கள் (இ) நீர் (ஈ) காற்று

## பிரிவு இ : இலக்கணம்

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனை வினா வாக்கியமாக மாற்றுக. (1x1= 1 மதிப்பெண்)

(i) பண்டித நேரு மனிதருள் மாணிக்கம் என்று அழைக்கப்படுகிறார்.
(ii) அப்துல் கலாம் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தில் பணிபுரிந்தார்.

15. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைக்க. (1x3= 3 மதிப்பெண்கள்)

(i) ஆழம்பார்த்தல் -
(ii) தட்டிக்கழித்தல் -
(iii) கிள்ளுக்கீரை -
(iv) கதை கட்டுதல் -

16. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு எதிர்மறைச் சொற்களை எழுதுக. (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) நல்லது -
(ii) மலை -
(iii) ஏற்றம் -

17. பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான கலைச்சொற்களை எவையேனும் இரண்டனுக்கு விடையளி (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) Internet -
(ii) Automation -
(iii) Punched card -
(iv) Versatility -

18. பின்வரும் இரட்டைக் கிளவி சொற்களில் ஏதேனும் ஒன்றனை வாக்கியத்தில் அமைக்க. (1x1= 1 மதிப்பெண்)

(i) சலசல -
(ii) கமகம -

பிரிவு ஈ

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 19 - 20 )

நிலவு வெளிச்சத்தில் சிந்துநதியின் மீது சேர நாடாகிய கேரளத்துப் பெண்களுடன் அழகிய தெலுங்கு மொழியில் பாடல்களைப் பாடியவாறு படகுகள் ஓட்டி விளையாடி மகிழ்வோம்.

கங்கை நதிக்கரையில் பெருமளவில் விளைகின்ற கோதுமையைப் பெற்றுக் கொண்டு அதற்கு மாற்றாக காவிரிமண்ணில் விளையும் வெற்றிலையைத் தருவோம். வீரம்செறிந்த மராட்டியர்களிடமிருந்து கவிதைகளை வாங்கிக் கொண்டு அவற்றுக்காக சேரத்து யானைகளின் தந்தங்களைப் பரிசாகத் தருவோம்.

காசி நகரிலிருந்து ஒரு புலவன் பேசும் உரையைக் காஞ்சி நகரிலிருந்தவாறே கேட்பதற்கு ஏற்ற ஒரு கருவியைக் கண்டுபிடிப்போம். இராசபுதன வீரர்களுக்குத் தங்கவயல் கொண்ட கன்னட மண்ணில் கிடைக்கும் உயர்ந்த தங்கத்தைத் தந்து மகிழ்வோம்.

உயர்ந்த பட்டு நூல்களால் ஆடை நெய்தும் தரமான பருத்தி நூல்களால் உடை நெய்தும் மலைபோல் வீதிகளில் குவிப்போம். இவற்றைப் பெருமளவில் பொருள்கள் கொண்டுவரும் காசிநகர் வணிகருக்கு விற்று முடிப்போம்.

19. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1x3= 3 மதிப்பெண்கள்)

(i) சேர நன்னாடு என்பது
(அ) தமிழ்நாடு (ஆ) மதுரை (இ) தஞ்சாவூர் (ஈ) காஞ்சி

(ii) கங்கை நதிக்கரையில் மிகுதியாக விளையும் பயிர்
(அ) கோதுமை (ஆ) அரிசி (இ) பருப்பு (ஈ) கரும்பு
(அல்லது)
மராட்டியருக்கு பாரதி பரிசளிக்க விரும்பியது.
(அ) சேரத்து யானை தந்தம் (ஆ) பருத்தி ஆடைகள் (இ) பட்டு நூல் (ஈ) தங்கம்.

(iii) உயர்ந்த தங்கம் கிடைக்கும் இடம்
(அ) தமிழ்நாடு (ஆ) கேரளம் (இ) காசி (ஈ) கன்னடம்

20. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்கவும். (1 மதிப்பெண்)

(i) காசி ---------------- பேசும் உரை
(ii) காஞ்சியில் கேட்பதற்கோர் -------------- செய்வோம்.

21. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கனுக்கு சரியா தவறா என கண்டறிக. (1x4= 4 மதிப்பெண்கள்)

(i) கற்பதற்குரிய பருவம் இளமைப்பருவம்.
(ii) நாடு கடந்தபின் வரிப்பணம் வாங்க முடியாது.
(iii) முதுமைப் பருவத்தில் கற்றவன் வல்லவனாய்த் திகழ முடியாது.
(iv) மனவெழுச்சியும் நினைவாற்றலும் கல்விக்குத் தேவை.
(v) ஒருவன் தானாகப் படித்தறிவது கல்வியாகாது.
(vi) பாம்புக்குக் கால்கள் உண்டு.
(vii) புனல் என்ற சொல்லின் பொருள் நெருப்பு.
(viii) முழுமையாகக் கல்வி பெறாதவர் நிறைகுடதிற்கு ஒப்பாவர்.

22. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும். (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) வான்வழிச் செல்வோர் யாவர்?
(ii) அருவிகளின் செயல்கள் யாவை?
(iii) குறவர் இனக் குல ஒழுக்கம் யாது?
(iv) குமனசித்தரின் செயல்கள் யாவை?

## பகுதி ஆ பிரிவு அ

(செய்யுள் 5+உரைநடை 6 = 11 மதிப்பெண்கள்)

23. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) கானவர்கள் யாவர்?
(ii) திரிகூடநாதரை உலகம் எங்கும் தேடுபவர் யார்?

24. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 40 முதல் 45 சொற்களில் விடையளிக்கவும். (1x3=3 மதிப்பெண்கள்)

(i) கண்ணுடையர், புண்ணுடையர் எனத் திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகின்றார்?
(ii) கல்வியின் சிறப்புக்களாக வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

பின்வரும் வினாக்களுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும்

25. சமுதாயப் பாதுகாப்புப் பற்றிக் காந்தியடிகளின் கொள்கை யாது?
(2 மதிப்பெண்கள்)

26. (2 மதிப்பெண்கள்)

(i) கலாமின் மனதில் நிலைத்துவிட்ட மூன்று நபர்கள் யார்?

(அல்லது)

(ii) இந்தியா 2020 என்னும் நூல் எதைப் பற்றியது?

27. (2 மதிப்பெண்கள்)

(i) நாடகத்தின் முக்கியமான பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ii) மரங்களை வெட்டுவதால் ஏற்படும் தீமைகள் யாவை?

## பிரிவு ஆ

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 28 – 29)

திருக்குற்றாலமலையில் உள்ள ஆண் குரங்குகள் பலவகையான பழங்களைப் பறித்து மந்திகளுக்குக் கொடுத்துக் கொஞ்சி மகிழும். அப்பழங்களைத் தின்றும் சிதைத்தும் மந்திகள் விளையாடும். இவ்வாறு மந்தி சிந்திய பழங்களை வான் உலகில் வாழும் தேவர்க் கூட்டம் மிக வேண்டி விரும்பிக் கேட்கும்.

காடுகளில் வாழும் வேடர்கள் தங்கள் கண் பார்வையாலேயே உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள். வான் வழியாகச் செல்லும் சித்தர்கள் கீழிறங்கி இம்மலைக்கு வந்து உடலுக்கு நன்மை அளிக்கும் யோகங்கள் என்னும் சித்து வேலையைச் செய்வார்கள்.

இம்மலையிலுள்ள தேன் கலந்த மலை அருவியின் அலைகள் மேல் நோக்கி உயர்ந்து பாய்ந்து வானத்தில் இருந்து வழிந்து ஓடும். அதனால் செந்நிறச் சூரியனின் தேரில் பூட்டிச் செல்லும் குதிரைக் கால்களும் தேர்ச் சக்கரமும் வழுக்கி விழும்.

வளைந்த இளம் பிறையைச் சூடிய சடை முடியையும் உடையவர். திருக்குற்றாலநாதராகிய சிவபெருமான். அவர் எழுந்தருளியுள்ள சிறப்பு மிக்கது திருக்குற்றால மலை. அம்மலையே எங்களுக்கு உரியது என்று குறத்தி மலைவளம் கூறுவதாக முதல் பாடல் அமைந்துள்ளது.

28. திருக்குற்றாலமலையில் ஆண் குரங்குகள் செய்த செயல் யாது?
(2 மதிப்பெண்கள்)

29. (i) காடுகளில் வாழும் வேடர்கள் என்ன செய்வர்?
(2 மதிப்பெண்கள்)

(அல்லது)

(iii) மலை அருவிகளால் வழுக்கிச் செல்பவை எவை?

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 30 – 32)

கற்பக விருட்சத்தை உடைய சொர்க்க லோகத்தில் வாழ்கின்ற தேவர்கள்கூட விரும்பி வருகின்ற சிறப்பும், சிந்தையால் நினைத்துப் பார்ப்பதற்கு அரிதும், விண்ணளவு அளவிற்கு உயர்ந்து தோன்றுவதுமாகிய சபா மண்டபம் மேலும் சிறப்புப்பெறும் வகையில் தசரதன் அங்கு வந்து சேர்ந்தான்.

சிறப்பு மிக்க அம்மண்டபத்தில் அமைந்திருந்த சிங்காசனமானது மேலும் சிறப்புடையுமாறு மிகுந்த பொலிவுடன் அரசன் அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்தவர்கள் இவன் தேவர் குலத் தலைவனான இந்திரனோ என்று ஐயம் கொண்டார்கள். பின்னர் இவனுக்கு ஆயிரம் கண்கள் இல்லையே என்று தெளிந்து இவன் இந்திரன் அல்லன் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

சிங்கம் போன்ற வலிமை மிக்க அரசனின் எதிரில் உலக உயிர்களையும், தேவர்களையும், நான்முகனையும் நான் இப்பொழுதே படைப்பேன் என்று பெருங்கோபத்துடன் கூறிப் படைக்கத் தொடங்கியவனும் கோபம் நிறைந்தவனுமாகிய விசுவாமித்திர முனிவர் தசரனின் சபா மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

30. (i) கற்பக விருட்சம் எங்குள்ளது? (2 மதிப்பெண்கள்)

(அல்லது)

(ii) தசரதனைக் கண்டவர்கள் யார் என ஐயம் கொண்டனர்?

31. தசரதனை இந்திரன் அல்லன் என தெளிந்தது எவ்வாறு?

(2 மதிப்பெண்)

32. தசரதனின் சபாமண்டபத்திற்கு வந்தது யார்?

(2 மதிப்பெண்)

33. பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை வரைக.

(1x3= 3 மதிப்பெண்கள்)

சிற்றிலக்கிய வகை – குறவஞ்சி – திருக்குற்றாலக் குறவஞ்சி – மலை வளம் - நீர் வளம் - செல்வ வளம் - குறவன், குறத்தி – திருமண உறவு – குறவஞ்சிப் பாடல்கள் - இனிய சுவை - இசையோடு பாடுதல் - தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு – பாரதியார் சிந்தனையோடு ஒத்திருத்தல்.

## பிரிவு இ : இலக்கணம்

34. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனை பிரித்தெழுதுக.

(1x2= 2 மதிப்பெண்கள்)

(i) தாமின்புறுவது -

(ii) சாந்துணையும் -

35. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. (1x2=2 மதிப்பெண்கள்)

(i) இரட்டைக்கிளவி சொற்கள் என்றால் என்ன?

(ii) சிங்கம் சரேலெனப் பாய்ந்தது - இதிலுள்ள ஒலிக்குறிப்புச் சொல்லினை கண்டறிக.

36. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனை சேர்த்து எழுதுக.

(1x2= 2 மதிப்பெண்கள்)

(i) ஏமாப்பு + உடைத்து -

(ii) வாழும் + உயிர்க்கு -

## பிரிவு ஈ

37. கீழே கேட்கப்பட்டுள்ள வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும்.

(3x1= 3 மதிப்பெண்கள்)

(i) யாதும் ஊரே எனத் தொடங்கும் பாடல் கருத்தின் வழி விதியின் வலிமையை அறிதல் என்பதை விளக்கி எழுதுக.

38. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(2x1= 2 மதிப்பெண்கள்)

(i) உலகம் ஒரு குடும்பம் என்று உணர்த்தும் பூங்குன்றனார் பாடலின் கருத்தினை விளக்குக.

(ii) வேற்றுமையைப் போக்கும் வழியாக பூங்குன்றனார் கூறுவது யாது விளக்குக.

39. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(1x5= 5 மதிப்பெண்கள்)

(i) காந்தியாரின் தென்னாப்பிரிக்கப் பயண அனுபவங்களை விளக்கி எழுதுக.

(ii) தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்துக் காந்தி போராடியமையை விளக்கியுரைக்க.

## பகுதி இ - பிரிவு உ

40. பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து பொருத்துக.
(1x2= 2 மதிப்பெண்கள்)

(i) நிலமகளின் பொட்டும் மணமுமாக விளங்குவது
(அ) தமிழ்ப்பெண் (ஆ) கேரளம் (இ) கன்னடம் (ஈ) டில்லி

(ii) இந்த தேசம் பூக்களின் தலையில் பெட்ரோலை ஊற்றிவிட்டு என்ன தேடுகிறது?
(அ) தீப்பெட்டி (ஆ) தண்ணீர் (இ) பூக்களை (ஈ) சாப்பாடு
(அல்லது)

(iii) ஆணின் அடக்குமுறைக்கு சொல்லப்படும் சமாதானம்
(அ) அதிகாரம் (ஆ) ஆபீஸ் டென்ஷன் (இ) உரிமை (ஈ) கடமை

41.
(1 மதிப்பெண்)

(i) எழுத்துக்கள் முதன்மையாகக் கொண்டுள்ளது.
(அ) அகரம் (ஆ) இகரம் (இ) உகரம் (ஈ) ஏகாரம்
(அல்லது)

(ii) யார் இவ்வுலகில் நீடு வாழ்வர்?

(அ) செல்வந்தர் (ஆ) இறைவனை வணங்குபவர் (இ) ஏழை (ஈ) கோபக்காரர்.

42. பின்வருவனவற்றுள் சரியான விடையைக் கண்டறிந்து பொருத்துக.
(1x2=2 மதிப்பெண்கள்)

(i) குறுந்தொகையில் இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை
(அ) 401 (ஆ) 400 (இ) 402 (ஈ) 100

(ii) முறை என்பதற்குப் பொருள்
(அ) உறவு முறை (ஆ) சட்டம் (இ) விதி (ஈ) நீதி

43. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களுள் விடையளிக்க. (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) மு.வரதராசனாரின் அன்னைக்கு எழுதிய கடிதத்தின் செய்தி யாது?

(ii) அன்னையின் கருத்தாக மு.வ. தெரிவிக்கும் செய்தி யாது?

44. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(1x4= 4 மதிப்பெண்கள்)

(i) கலிங்கப்போர் குறித்து விளக்குக?

(அல்லது)

(ii) அசோகரின் ஆட்சிச் சிறப்பினை விளக்குக?

45. மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை தமிழ்த்தாயை வாழ்த்திப் பாடிய செயல்கள் யாவை? (1x4= 4 மதிப்பெண்கள்)

--------------------------------------------------------------------------------

# இடைநிலைக் கல்வித் தேர்வு விடைகள்
# தமிழ் (237)

1. வேராக.
2. நெற்றிக்கண்
3.
   (அ) சாப்பிடுவதைப்போல.
   (அல்லது)
   (ஆ) கூட்டணி

4.
   (அ) குற்றமின்றிக் கற்க வேண்டும்.
   (அல்லது)
   (ஆ) கல்விச் செல்வம்.

5.
   (அ) ஆறு.
   (அல்லது)
   (ஆ) செல்வம்.

6.
   (i) சரி
   (ii) சரி
   (iii) தவறு

7. (ஈ) தங்கவேலு ஆசாரி.

8.

   (அ) திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் - காந்தியடிகள்

   (ஆ) மகாத்மாவின் மரணத்திற்கு காரணம் - மதவெறி

   (இ) நாடு முன்னேற எது வேண்டும் - கடமை ஒழுங்கு

   (ஈ) தரும மகாமித்திரர்கள் - தமபோதகர்கள்

9.

   (i) சிறை அதிகாரியாக.

(ii) பிரம்பு

10.

i) 5000

ii) நேபியர் ராடுகள்

iii) பிளேஸ் பாஸ்கல்

iv) ஜேர்மன்

11.

i) ஸ்காட்லாந்து

(ii) லீப்னிஸ்

(iii) அபாகஸ்

(iv) 1694

12.

(i) சரி

(ii) தவறு

(iii) சரி

(iv) தவறு

(v) தவறு

(vi) சரி

(vii) சரி

13.

(i) (அ) நெற்றிக்கண்

(ii) (ஆ) காட்டு வேர்கள்

14.

(i) மனிதருள் மாணிக்கம் என்றழைக்கப்படுபவர் யார்?

(ii) அப்துல் கலாம் எங்கு பணிபுரிந்தார்?

15.

(i) சிலர் பேசுவது எதிரில் உள்ளவரை ஆழம்பார்க்கும்விதமாக அமையும்.

(ii) கந்தன் தட்டிக்கழிக்கும்விதமாக பேசினான்.

(iii) வேலையற்றவனை சமுதாயம் கிள்ளுக்கீரையாக நினைக்கும்.

(iv) நடக்காத நிகழ்வினை நடந்ததுபோல் சிலர் கூறுவதை கதை கட்டுதல் என்பர்.

16.
(i) கெட்டது
(ii) மடு
(iii) இறக்கம்

17.
(i) இணையம்
(ii) தானியக்கம்
(iii) துளை அட்டை
(iv) பல்திறன்

18.
(i) சலசல - நீர் சலசலவென ஓடியது
(ii) கமகம - சமைக்கும்போது வாசம் கமகமவென வந்தது.

19.
(i) கேரளம்
(ii) கோதுமை
(அல்லது)
சேரத்து யானை தந்தம்
(iii) கன்னடம்

20.
(i) புலவன்
(ii) கருவி

21.
(i) சரி
(ii) சரி
(iii) சரி
(iv) சரி
(v) சரி
(vi) சரி
(vii) தவறு
(viii) தவறு

22.

(i) கமன சித்தர்கள்.

(ii) கழங்காடும், சிற்றிலைக் கொண்டோடும்.

(iii) தன் சாதியிலேயே பெண் கொடுத்து பெண் எடுப்பார்கள்.

(iv) சித்தர்கள் இம்மலைக்கு வந்து யோகங்கள்,சித்து வேலையைச் செய்வார்கள்.

23.

(i) வேடர்கள்.

(ii) திருமால்.

24.

(i) கண்ணுடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர் கற்றவரே. கல்லாதவர் தம் முகத்தில் இரண்டு கண்களைப் பெற்றிருப்பர். ஆயினும் அவற்றைப் புண்கள் என மக்கள் இழிவாகக் கூறுவர்.

(ii) கற்றவனுக்கு எந்தவொரு நாடும் எந்தவொரு ஊரும் சொந்தமாகும். அத்தகு மதிப்பையும் பொருளையும் தருவது கல்வி. ஒரு பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறப்பிலும் தொடரும். ஒருவருக்குக் கெடுதல் இல்லாத மேன்மை உடைய செல்வமாக விளங்குவது.

25. ஒரு நாடு பாதுகாப்புத் துறையிலும் அது சார்ந்த அமைப்புகளிலும் தன்னிறைவு பெறவேண்டும். அப்பொழுதுதான் தேசப் பாதுகாபபினைப் பேணிக்காக்க முடியும். ஒரு சில தொழில்நுட்பத் துறைகளிலும் அறிவியல் தொழில்நுட்பத்திலும் நம் உள்வள வலிமைகளை நாம் வலுப்படுத்த வேண்டும். தொழில்நுட்பம் ஒன்றே தேசப்பாதுகாப்பு அளிக்கமுடியும்.

26.

(i) வெங்கட், குப்புசாமி, மற்றும் கருப்பன்.

(அல்லது)

(ii) அனைத்து துறைகளிலும் மனிதவள ஆற்றலை மேம்படுத்தச் செயல்திட்டங்களை வகுத்துள்ளது.

27.

(i) நாடகத்தில் காட்சிகள் இடம்பெறும், அங்கங்கள் இடம்பெறும், காட்சிகளில் கதைமாந்தர்கள் தோன்றி உரையாடல், சம்பவங்களின் வழி கதையை நகர்த்திச் செல்வது.

(அல்லது)

(ii) மரங்கள் கிராமத்து வாழ்க்கையில் உயிர்நாடியாக விளங்குகிறது. மண் அரிமானத்தைத் தடுக்கின்றன. ஆடுமாடுகளுக்குச் சிறந்த உணவைத் தருகின்றன இவற்றை வெட்டுவதால் இவை கிடைக்காமல் போகின்றன.

28. பழங்களைப் பறித்து மந்திகளுக்குக் கொடுத்துக் கொஞ்சி மகிழும்.

29. (i) கண் பார்வையாலேயே உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள்

(அல்லது)

(ii) சூரியனின் தேரில் பூட்டிச் செல்லும் குதிரைக் கால்கள் வழுக்கும்.

30. (i) சொர்க்க லோகம்

(அல்லது)

(ii) இந்திரன்

31. ஆயிரம் கண்கள் இல்லையென்பதால்

32. விசுவாமித்திர முனிவர்

33.

தமிழில் 96 வகை சிற்றிலக்கியங்கள் உள்ளன. அவற்றுள் குறவஞ்சியும் ஒன்று இவ்வகையில் தோன்றிய நூல்களுள் திருக்குற்றாலக் குறவஞ்சி குறிப்பிடத்தக்கது ஆகும். தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுள் திருக்குற்றாலமும் ஒன்று. இவ்வூர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. அருவிகள் நிறைந்த ஊர். தேன் அருவி, செண்பக அருவி, ஐந்து அருவி, பழைய அருவி போன்ற பல அருவிகள் இங்கு உள்ளன. இத்தகு நீர்வளம் மிக்கது திருக்குற்றாலம். இவ்வாறு குறத்தி தன் மலையின் வளம் கூறுகின்றாள். குறவர்கள் தம் இனத்திலேயே பெண் கொடுதது பெண் எடுப்பர். குறத்தி இந்தியா முழுமையும் உள்ள அனைத்து மலைகளும் தங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உறவு உடையவை என்று குறத்தி கூறுகிறாள். குறத்தியின் இக்கூற்று பாரதியின் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுச் சிந்தனையை ஒத்திருக்கிறது.

34.

(i) தாம் + இன்புறுவது

(ii) சாம் + துணையும்

35.

(i) பிரித்தால் பொருள்தராத ஒலிக்குறிப்புச் சொற்கள்.

(ii) சரேலென

36.

(i) ஏமாப்புடைத்து

(ii) வாழுமுயிர்க்கு

37.

(i) துன்பமோ இன்பமோ பிறரால் வருவனவன்று. அவற்றிற்கு விதியே காரணமாகும். இடி முழங்கும் வானத்திலிருந்து மின்னல் ஒளிர்கிறது. அதன்பின் குளிர்ந்த மழை பொழிகிறது. அது மலையின் மீது விழுகிறது. பிறகு அருவியாய்ப் பாய்ந்து ஆறாகப் பெருக்கெடுத்து அதில் தெப்பம் செல்லுகிறது. அதுபோலப் பிறவி என்னும் பெரிய ஆற்றில் விழுந்த உயிர் விதிக்கு ஏற்பவே இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்கிறது. ஆகவே தனக்கு ஏற்பட்ட நன்மை, தீமைக்குத் தானே காரணம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இவ்வாறு நன்கு உணர்ந்தோர் பெரியோரைப் புகழவும் சிறியவர்களை இகழவும் செய்யமாட்டார். எல்லாம் விதியின் செயல் என்பதை எண்ணி மன அமைதி பெறுவர்.

38.

(i) ஒருவருக்கு நன்மையும் தீமையும் தோன்றும். அவற்றைப் போலவே வருத்தமும் அது நீங்கிய மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. இவ்வுலகில் பிறப்பு இருப்பதைப் போல இறப்பு என்பதும் உறுதி. இவ்வுலக வாழ்க்கை இனிமை உடையது என்றெண்ணி மகிழவும் வேண்டாம். துன்பம் உடையது என்று தளரவும் வேண்டாம். இவை அனைத்தும் பிறரால் வருவன என்று கருதக் கூடாது. இவ்வுலகத்தில் உள்ள ஊர்களைத் தம் ஊராகக் கொண்டு அனைவரையுடம் உறவினராகப் பார்த்தால் முரண்பாடுகள் இல்லாத நல்ல வாழ்வினை வாழலாம். வேற்றுமைகளை மறக்க மனிதநேயமே அடிப்படையாகும்.

(ii) எந்த ஊராயினும் அது எமக்கு ஊராகும். யாராக இருப்பினும் அவர் எமக்கு உறவினராவார். நமக்கு ஏற்படும் கெடுதலோ நன்மையோ பிறரால் வருவதன்று. வருத்தமும், மகிழ்ச்சியும் அத்தன்மையினவாம். இவ்வுலகில் இனியது என்று மகிழ்ச்சி அடைவதும் இல்லை. துன்பம் வந்த நேரத்தில் கொடியது என ஒதுக்குவதும் இல்லை. ஆற்றில் அகப்பட்ட தெப்பம் அந்நீரின் போக்கிற்கு ஏற்பச் செல்கிறது. அதனைப் போல இவ்வுலக வாழ்வில் அகப்பட்ட உயிர்கள் விதியின் வழியிலேயே செல்லும் என்பது அறிவுடையோர் கண்டு தெளிந்த உண்மையாகும். ஆகையால் மாண்பினால் பெருமை பெற்றோரை மதித்துப் போற்றுதலையும் செய்ய மாட்டோம். சிறியவரை இகழ்ந்து கூறுவதையும் செய்வோம்.

39.

(i) தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களில் முஸ்லீம் உடை தரிப்பவர்கள் மட்டும் தலைப்பாகை அணிந்து கொள்வதும், மற்றவர்கள் தலைப்பாகையை எடுத்துவிடுவதும் வழக்கமாக

இருந்துள்ளது. இந்நிலையில் காந்தி அணிந்திருந்த தலைப்பாகையை எடுக்கும்படி ஆங்கிலேயர் கூறினர். இந்தியத் தலைப்பாகையைக் கழற்றி விடுவது என்பது அவமதிப்புக்கு உடன்படுவதாக ஆகும் என்று காந்தி எண்ணினார். ஆனால் அதே நேரத்தில் ஆங்கிலத் தொப்பி போட்டுக் கொள்ளுவதே போதும் என்றும் கருதினார். இரெயில் பயணத்தில் முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் பயணம் செய்யும் இந்தியர்கள், தென்னாப்பிரிக்க ரெயில்வே அதிகாரிகளாலும் வெள்ளையர்களாலும் துன்பப்படுதல் வழக்கமாக இருந்தது. காந்தியடிகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல. காந்தி பிரிட்டோரியாவுக்கு ரெயிலில் பயணம் செய்தபோது காந்தி கருப்பு மனிதன் என்பதால் ஒரு ரெயில்வே அதிகாரி காந்தியைப் பார்த்து நீர் சாமான்கள் வண்டிக்குப் போக வேண்டும். என்று கூறி அவரது கையைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளிவிட்டார். பின்னர் காந்தி தனக்கு ஏற்பட்ட அவமானங்களைப் பொருட்படுத்தாமல் கடமையை நிறைவேற்ற வேறு ஒரு ரெயில் மூலம் பிரிட்டோயாவிற்குப் புறப்பட்டார்.

காந்தி பிரிட்டோரியாவிற்கு ரெயிலில் முதல் வகுப்பு டிக்கெட் எடுத்து பயணம் செய்து கொண்டிருக்கும்போது டிக்கெட் பரிசோதகர் அவரை மூன்றாம் வகுப்பு வண்டிக்குப் போகச்சொன்னார். அப்போது காந்தியுடன் பயணித்த ஆங்கிலப் பிரயாணி எனக்கு எதுவும் ஆட்சேபம் இல்லை என்றார். அதற்கு பரிசோதகர் ஒரு கூலியுடன் பிரயாணம் செய்ய நீங்கள் விரும்பினால் எனக்கு என்ன கவலை என்று கார்டு அந்த ஆங்கிலப் பிரயாணியிடம் கூறினார்.

(ii) தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களில் முஸ்லீம் உடை தரிப்பவர்கள் மட்டும் தலைப்பாகை அணிந்து கொள்ள முடியும் என்ற வழக்கத்தினால் காந்தியை தலைப்பாகையை எடுக்கும்படி ஆங்கிலேயர் கூறினர். ஆனால் காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்த காலம் முழுவதும் தலைப்பாகையை அணிந்திருந்தார். இச்சம்பவம் அவர்க்கு தென்னாப்பிரிக்காபில் எதிர்பாராத விளம்பரத்தை அளித்தது. காந்தி பிரிட்டோரியாவுக்கு ரெயிலில் பயணம் செய்தபோது முதல் வகுப்பில் பயணம் செய்யக்கூடாது என்றும் நீர் சாமான்கள் வண்டிக்குப் போக வேண்டும் என்றுெ போலீஸ்காரர் வந்து அவரது கையைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளிவிட்டார். ரெயிலும் புறப்பட்டுப் போய்விட்டது, காந்தி அதனைப் பொருட்படுத்தாமல் கடமையை நிறைவேற்ற வேறு ஒரு ரெயில் மூலம் பிரிட்டோரியாவிற்குப் புறப்பட்டார். இவ்வாறு மீண்டுமொருமுறை நிகழ்ந்தது. பின்னர் ஓர் குதிரை வண்டியில் பயணம் செய்தபோது அவரை ஒரு பிரயாணியாகக் கருதாமல் அவரை ஒரு கூலியாகவே கருதினர். மற்றொரு முறை காந்தி உலாவுவதற்குப் பிரஸிடெண்டு தெருவழியாக ஒரு மைதானத்தில்

நடந்துபோகும்போது புதிதாக ஒரு போலீஸ்காரர் காந்தியை உதைத்துத் தெருவில் தள்ளிவிட்டார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு எதிரான ஆங்கிலேயர்களின் அடக்குமுறை சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்ட இருந்தமையை மேற்கூறிய நிகழ்வுகளின் மூலம் நம்மால் அறிய முடிகின்றது. அத்துடன் காந்தியார் பட்ட அவமானங்களையும், துன்பங்களையும் உணர முடிகின்றது.

40.

(i) தமிழ்ப்பெண்

(ii) தீப்பெட்டி

(iii) ஆபீஸ் டென்ஷன்

41.

(i) அகரம்

(அல்லது)

(ii) இறைவனை வணங்குபவர்

42.

(i) 400

(ii) விதி

43.

(i) தமிழர்களின் இயல்பு - அன்னையின் அறிவுரை - அறிஞர்களைப் போற்றுதல் - மகாத்மா காந்தியடிகளின் மரணம் - காந்தியடிகளின் அரசியல் வாழ்வு - காந்தியடிகள் வள்ளுவரின் திருக்குறளுக்குச் சான்றாதாரமாக விளங்கிய நிலை ஆகியவை.

(ii) பழங்காலப் பிற்போக்குத் தமிழனாக இருந்து வாயால் மட்டும் விளங்காமலும், உணர்வால் மட்டும் உயராமலும், செயலாலே சீர்ப்பட்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முற்போக்குத் தமிழனாக வாழவேண்டும் என்று அன்னையின் கருத்தாக அறிவுரையாக மு.வ. கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளமை போன்றவை.

44.

(i) அசோகன் தன் பட்டத்துக்கு வந்த ஒன்பதாவது ஆண்டில் கலிங்கததின் மீது படையெடுத்தல் - கலிங்கதேசம் இருந்த இடம் - கலிங்கர்களுடன் வீரத்துடன் போரிட்டமை - போர்க்களத்தில் வீரர்கள் மடிந்து போதல் - அசோகன் மனம் வேதனையடைந்து இனி போர் என்பதே கூடாது என முடிவெடுத்தல் போன்றவை.

(அல்லது)

(ii) அரசனாகவும், சக்கரவர்த்தியாகவும் விளங்கியவன் அசோகன் - வோல்காவிலிருந்து சப்பான் வரையில் அவனுடைய பெயர் இன்றும் கவுரவிக்கப்படுகிறது. சீனாவிலும், திபெத்திலும் இந்தியாவிலும் அவனுடைய பெருமை வழிவழியாகப் பாராட்டப்பட்டு வருகிறது போன்றவை.

45. கடலால் சூழப்பெற்ற பெண்ணாகிய நிலமகளின் அழகிய முகமாகப் பாரதநாடு விளங்குகின்றது. பாரத நாட்டின் தென்பகுதியில் திராவிட நாடு பிறை நெற்றியாகக் காணப்பெறுகின்றது. திராவிட நாடு நெற்றியில் உள்ள திலகமாகக் காணப்படுகிறது. அப்பொட்டும் அதன் மணமும் போல தமிழ்ப்பெண் விளங்குகின்றாள். எல்லாத் திசைகளிலும் புகழ் மணக்க இத்தமிழ்ப்பெண் வாழ்ந்து வருகிறாள். உன்னுடைய பெருமை மிக்க இளமையை நாங்கள் மெய்மறந்து வாழ்த்துகின்றோம்! வாழ்த்துகின்றோம் வாழ்த்துகின்றோம் போன்றவை.

---